வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 22.04.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பத்ம விருதுகளை இன்று வழங்கினார்.

கேரளா, கர்நாடகா உட்பட 13 மாநிலங்களின் 89 தொகுதிகளுக்கு 2 ஆம் கட்ட தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

உலகின் மிக உயரமான ராணுவத் தளம் அமைந்துள்ள சியாச்சின் மலைப்பகுதிக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று நேரில் சென்று பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அனல் காற்றும் வெப்ப நிலையும் அதிகரித்து வரும் நிலையில் தேர்தல் ஆணையம் சிறப்பு ஆலோசனை கூட்டத்தை இன்று நடத்தியது.

***குடியரசு தலைவர்*** (14)

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு புதுடெல்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் இன்று மாலை நடைபெற்ற விழாவில், பத்ம விருதுகளை வழங்கினார். முன்னாள் குடியரசு துணைத் தலைவர் திரு வெங்கையா நாயுடு மற்றும் பரதநாட்டிய கலைஞர் டாக்டர் பத்மா சுப்பிரமணியம் ஆகியோருக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பத்ம விபூஷன் விருது வழங்கினார். மறைந்த சமூக கல்வியலாளர் பிந்தேஷ்வர் பதக்-கிற்கு பத்மவிபூஷன் விருது இறப்பிற்கு பிந்தைய விருதாக வழங்கப்பட்டது. நடிகர் மிதுன் சக்ரவர்த்தி, பாடகி உஷா உதுப் ஆகியோர் பத்மபூஷன் விருதை பெற்றனர். சமூக செயற்பாட்டாளர் டாக்டர் சீதாராம் ஜிண்டால், இருதய நோய் நிபுணர் டாக்டர் தேஜாஸ் மதுசூதன் பட்டேல் மற்றும் உத்திரபிரதேச மாநில முன்னாள் ஆளுநர் திரு ராம்நாயக் ஆகியோருக்கும் பத்மபூஷன் விருதுகளை குடியரசு தலைவர் வழங்கினார். பத்மவிருதுகள் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தையொட்டி அறிவிக்கப்பட்டு வருகிறது.

**2 ஆம் கட்ட தேர்தல்** (13)

கேரளா, கர்நாடகா உட்பட 13 மாநிலங்களின் 89 தொகுதிகளுக்கு வரும் 26 ஆம் தேதி 2 ஆம் கட்ட தேர்தல் நடைபெறுவதை ஒட்டி, அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி உத்திரபிரதேச மாநிலம் அலிகர்கில் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் இன்று உரையாற்றினார். மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் திரு பிரகாஷ் காரத், கேரளாவின் காசக்கோட்டிலும், திருமதி பிருந்தா காரத் பந்தனம் திட்டா பகுதிகளிலும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் திரு டி ராஜா கன்னூர் பகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். கேரள மாநிலத்தில் பதற்றமான வாக்குச்சாவடிகளில் தேர்தல் பாதுகாப்பு பணியை மேற்கொள்வதற்காக மத்திய ரிசர்வ் காவல் படையினர் மற்றும் திபெத்திய எல்லை பாதுகாப்பு படையினர் கன்னூர் மாவட்டம் வந்துள்ளனர்.

***ராஜ்நாத்சிங்*** (18)

உலகின் மிக உயரமான ராணுவத் தளம் அமைந்துள்ள சியாச்சின் மலைப்பகுதிக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று

நேரில் சென்று பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். கடுமையான சூழ்நிலையில் பணியாற்றும் வீரர்களுடன் அவர் கலந்துரையாடினார். பல்வேறு கடினமான நிலைகளில் தாய் நாட்டை பாதுகாப்பதற்காக வீரம் மற்றும் உறுதியுடன் பணியாற்றி வரும் வீரர்களின் தியாகத்தை தேசம் மறக்காது என்றும், அவர்களின் பங்களிப்புகள் எதிர்கால சந்ததியினருக்கு உத்வேகம் தருவதாக இருக்கும் என்றும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார். சியாச்சின் இந்தியாவின் இறையாண்மை மற்றும் உறுதிப்பாட்டின் சின்னம் என கூறிய பாதுகாப்புத் துறை அமைச்சர், ஆபரேஷன் மேக்தூத்- தின் வெற்றியை நினைவு கூர்ந்தார். இது நாட்டின் ராணுவ வரலாற்றில் ஒரு பொன்னான அத்தியாயம் என தெரிவித் அவர் ஆபரேஷன் மேக்தூத்தின் வெற்றி அனைவரும் பெருமை கொள்ளத் தக்க ஒன்று எனவும் கூறினார். 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் தேதி சியாச்சினின் இந்திய ராணுவத்தால் ஆபரேஷன் மேக்தூத் தொடங்கப்பட்டது. பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங்குடன் ராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ்பாண்டே மற்றும் மூத்த ராணுவ அதிகாரிகளும் உடன் சென்றனர்.

***அமித்ஷா*** (18)

நாட்டில் நக்சலிசம் அழிவின் விளிம்பில் உள்ளது என்று பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித்ஷா தெரிவித்துள்ளார். சத்தீஷ்கர் மாநிலம் கான்கேர் நகரில் இன்று நடைபெற்ற தேர்தல் பேரணியில் கலந்து கொண்டு பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் பிஜேபி அரசு மீண்டும் மத்தியில் ஆட்சி அமைத்தால், அடுத்த 2 ஆண்டுகளில் சத்தீஷ்கரில் நக்சலிசம் ஒழிக்கப்படும் என்று உறுதி அளித்தார். சத்தீஸ்கரில் பிஜேபி அரசு பொறுப்பேற்ற கடந்த 4 மாதங்களில் 90 க்கும் மேற்பட்ட நக்சலைட்டுகள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 123 நக்சலைட்டுகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார். மேலும், சுமார் 250 நக்சலைட்டுகள் சரணடைந்து இருப்பதாகவும் அவர் கூறினார். நக்சலைட்டுகள் சரணடைந்து, சமூகத்தின் மைய நீரோட்டத்தில் இணைந்து செயல்பட வேண்டும் என்றும், இல்லையெனில், அவர்களின் அழிவு நிச்சயம் என்றும் திரு அமித்ஷா தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில் மத்தியில் உள்ள மோடி தலைமையிலான அரசு பழங்குடியினரின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அவர் கூறினார். நாட்டின் வளங்களில் ஏழைகள், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு முன்னுரிமை உள்ளது என்றும் திரு அமித்ஷா தெரிவித்தார்.

***கர்நாடகா காங்கிரஸ்*** (11)

கர்நாடகாவில் வரும் 26 ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள 14 தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்பு அடைந்துள்ளது. காங்கிரஸ் தேசிய தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே, பெங்களூரு ஊரக தொகுதியில் உள்ள சன்னபட்னா தொகுதியிலும், சிட்டபல்லாபூர் மக்களவை தொகுதியின் ஒரு பகுதியான எலகங்காவிலும் இன்று பிரச்சாரம் மேற்கொண்டார். காங்கிரஸ் மூத்த தலைவர்கள் திரு சி கே சிவக்குமார், திரு ஜெயராம் ரமேஷ் ஆகியோரும் இன்று பெங்களூருவில் ரோட் ஷோ நடத்தினர். இதற்கிடையே, பாஜக மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித்ஷா நாளை பெங்களூருவில் பிரச்சாரம் மேற்கொள்வதுடன், பெங்களூரு தெற்கு தொகுதியில் ரோட் ஷோவிலும் பங்கேற்கிறார்.

***தேர்தல் ஆணையம்*** (10)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அனல் காற்றும் வெப்ப நிலையும் அதிகரித்து வரும் நிலையில், தேர்தல் ஆணையம் இது தொடர்பான சிறப்பு ஆலோசனை கூட்டத்தை இன்று நடத்தியது. இந்திய வானிலை ஆய்வு மையம், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் சுகாதார

அமைச்சகத்தின் அதிகாரிகள் இந்த ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றனர். வாக்குப் பதிவு தினங்களில் வெப்ப அலையை கையாளுவதற்கான நடவடிக்கைகள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. நாட்டின் கிழக்குப் பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு வெப்ப அலை வீசக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள நிலையில் இந்த கூட்டம் நடைபெற்றது முக்கியத்துவம் பெறுகிறது.

***அருணாச்சலபிரதேசம்*** (13)

அருணாச்சலபிரதேசத்தில் 4 தொகுதிகளுக்கு உட்பட்ட 8 வாக்குச் சாவடிகளில் வரும் 24 ஆம் தேதி மறுவாக்குப் பதிவு நடைபெற உள்ளது. கடந்த 19 ஆம் தேதி ஒரே கட்டமாக நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைக்கு அங்கு தேர்தல் நடைபெற்றது. அப்போது பாமிங், நயாபின், ரும்காங் மற்றும் நாக்கோ தொகுதிகளில் வன்முறை ஏற்பட்டதை அடுத்து தற்போது மறு வாக்குப்பதிவு நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. மறு வாக்குப்பதிவு நாளை மறுநாள் காலை 6 மணிக்கு தொடங்கி, பிற்பகல் 2 மணி வரை நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதற்கிடையே, மணிப்பூர் மக்களவை தொகுதியில் 11

வாக்குச் சாவடிகளில் இன்று மறு வாக்குப்பதிவு நடைபெற்றது. கடந்த 19 ஆம் தேதி நடைபெற்ற முதல்கட்ட வாக்குப் பதிவின் போது இந்த வாக்குச்சாவடிகளில் வன்முறை சம்பவங்கள் நடைபெற்றதை அடுத்து, மறுவாக்குப்பதிவு நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

***சர்வதேச புவிதினம்*** (6)

சர்வதேச புவி தினம் இன்று கொண்டாடப்படுகிறது. பூமியையும் அதன் சுற்றுச் சூழலையும் பாதுகாக்கும் வகையில், உலகம் முழுவதும் நெகிழி பயன்பாட்டை அறவே கைவிடும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக புவியும்-நெகிழியும் என்ற கருப்பொருளுடன் இந்த ஆண்டு சர்வதேச புவி தினம் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி, உலகம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**செஸ்** (12)

கனடாவின் டோராண்டோவில் நடைபெற்ற கேண்டிடேட்ஸ் செஸ் போட்டியில் தமிழகத்தை சேர்ந்த இளம் வீரர் குகேஷ் பட்டம் வென்று

சாதனை படைத்துள்ளார். இவரது இந்த சாதனை குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். குகேஷின் இந்த சாதனையால் நாடே பெருமை கொள்கிறது என்றும், டோராண்டோ போட்டியில் அவர் தனது அசாதாரண திறமையை வெளிப்படுத்தினார் என்றும் பிரதமர் சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார். மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு அனுராக் சிங் தாக்கூர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், 22 வயதில் பட்டம் வென்ற செஸ் ஜாம்பவான் கேரி காஸ்ப்ரோவின் சாதனையை முறியடித்த 17 வயது கிராண்ட்மாஸ்டர் குகேசுக்கு பாராட்டுகள் என்று குறிப்பிட்டுள்ளார். தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் குகேஷின் சாதனைக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

***வானிலை*** (16)

தென்னிந்திய பகுதிகளின் மேல் வளி மண்டல கீழடுக்குகளில் காற்றின் திசை மாறுபாடு நிலவுவதால் அடுத்த 6 நாட்களுக்கு தென் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும் என்றும், வட தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 5 நாட்களுக்கு தமிழக உள் மாவட்டங்களில் ஒரு

சில இடங்களில் அதிகபட்ச வெப்ப நிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருக்கக் கூடும் என்றும், ஏனைய தமிழக மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றம் இருக்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்ச வெப்பநிலையாக ஈரோட்டில் 42.2 டிகிரி செல்சியசும், கரூர் பரமத்தியில் 41.5 செல்சியசும், சேலத்தில் 41 செல்சியசும், வேலூரில் 40.8 செல்சியசும், திருச்சியில் 40.6 செல்சியசும் பதிவாகி உள்ளது. தமிழக கடலோர பகுதிகள், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் 35 முதல் 39 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை பதிவானதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பத்ம விருதுகளை இன்று வழங்கினார்.

கேரளா, கர்நாடகா உட்பட 13 மாநிலங்களின் 89 தொகுதிகளுக்கு 2 ஆம் கட்ட தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

உலகின் மிக உயரமான ராணுவத் தளம் அமைந்துள்ள சியாச்சின் மலைப்பகுதிக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று நேரில் சென்று பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அனல் காற்றும் வெப்ப நிலையும் அதிகரித்து வரும் நிலையில் தேர்தல் ஆணையம் சிறப்பு ஆலோசனை கூட்டத்தை இன்று நடத்தியது.

***வடகொரியா*** (14)

குறுகிய தூரம் சென்று தாக்கக் கூடிய பாலிஸ்டிக் வகை ஏவுகணைகளை ஏவி வடகொரியா இன்று சோதனை நடத்தி உள்ளது. இதுகுறித்து தென்கொரியா வெளியிட்டுள்ள அறிக்கையில், வட கொரியாவின் தலைநகர் பகுதியில் இருந்து இந்த ஏவுகணை ஏவப்பட்டது தெரியவந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது. வடகொரியாவின் இந்த ஏவுகணை சோதனை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தி இருப்பதாகவும் தெரிவித்துள்ள தென் கொரியா, வடகொரியாவின் செயல்பாடுகளை கூர்ந்து கவனித்து வருவதாகவும், அமெரிக்கா மற்றும் ஜப்பானுடன் ஒருங்கிணைந்து ராணுவத்தை தயார் நிலையில் வைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, ஜப்பானும் வடகொரியாவின்

ஏவுகணை சோதனையை உறுதிப்படுத்தி உள்ளது. தங்கள் நாட்டை சேர்ந்த விமானம் மற்றும் கப்பல்கள் போன்றவற்றின் பாதுகாப்பில் அதிக கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு அந்நாட்டு பிரதமர் அலுவலகம் அறிவுறுத்தி உள்ளது.

***நீதிமன்றம்*** (9)

தேர்தலின் போது பணம் பறிமுதல் செய்யப்பட்ட விவகாரம் சட்ட விரோத பண பரிமாற்ற குற்றமாக கருத முடியாது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது. இது தொடர்பான வழக்கு விசாரணை உயர்நீதிமன்றத்தில் இன்று நடைபெற்ற போது, தேர்தல் நேரத்தில் பணம் பறிமுதல் தொடர்பான வழக்கை பட்டியலிடப்பட்ட குற்றமாக கருத முடியாது என்றும் அமலாக்கத் துறை விளக்கம் அளித்துள்ளது. இம் மனு மீது உரிய பதில் அளிக்க அமலாக்கத்துறைக்கு உத்தரவிட்ட நீதிமன்றம், வழக்கை நாளை மறுநாளுக்கு ஒத்தி வைத்தது.